1973 மார்ச் 17]

வித்து, தொழிலாளர்களுக்கு ஒரு மாதச சம்பளம் கிராஜுவடி தரவேண்டும் என்று வற்புறுத்தியது. ஆனால் மத்திய அரசு ஆண்டு ஒன்றுக்கு 15 நாட்கள் ஊதியத்தைத்தான் பணிக்கொடையாக தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. எனவே, அதற்கான விதிமுறைகளை இந்த அரசு விரைவில் செயல் படுத்தும்.

**திரு. டீ. சி. தூயமணி :** ஈக்குவல் ஒர்க், ஈக்குவல் வேஜ் என்று அரசியல் சட்டம் 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றும் வகையில் சட்டம் கொண்டு வரவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாநில அரசின் சார்பில் நான் டில்லியில் நடைபெற்ற தொழிலாளர் நலத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் ஆண்டுக்கு ஒரு மாதம் பணிக்கொடை தரவேண்டுமென்று வலியுறுத்தினேன். என்றாலும் மத்திய அரசு 15 நாள் ஊதியம்தான் தரவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது.

### பர்மா, இலங்கையிலிருந்து திரும்புவோருக்குக் கடன்கள்

*404. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் இருந்து வரும் அகதிகளுக்கு விவசாயம், வர்த்தகம் போன்ற தொழில் செய்ய குடும்பம் ஒன்றுக்கு எவ்வளவு ரூபாய் தற்போது கடன் வழங்கப்படுகிறது ?

**மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து :** விவர அறிக்கை @ ஒன்று சட்டப்பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. எ. வகாப் :** இந்த பர்மா, இலங்கை அகதிகளுக்கு அளிக்கப்படுகிற உதவித் தொகை போதவில்லை என்று அவர்களே சொல்கிறார்கள்—என் தொகுதியில்தான் அந்தப் பிரச்சினை இருக்கிறது— இந்த உதவித் தொகையை அதிகப்படுத்துவார்களா ? இப்போது ஒரு வீடு கட்ட 2 ஆயிரம் தான் தருகிறார்கள். அதற்குள் கட்ட முடிவதில்லை. ஆகவே இந்தப் பண உதவியை அதிகப்படுத்துவார்களா ? மேலும் வந்துகொண்டிருக்கிற அகதிகளுக்கும் இந்த உதவியை அளிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து :** இந்த அகதிகளுக்கு எந்த எந்த காரியத்திற்கு என்ன என்ன உதவி அளிப்பது என்பது மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படையில்தான் மாநில அரசாங்கம்

---

@ 114-119-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

தருகிறது. கொடுக்கிற உதவியைக் கூட சிலர் தான் அந்தக் காரியத்திற்காகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். பலபேர் வேறுவகையில் செலவிட்டுவிடுகிறார்கள். நகர்ப்புறங்களில் வீடு கட்ட ரூ. 4,100 என்றும், கிராமப்புறங்களில் வீடுகட்ட ரூ. 2,500 என்றும் இப்போது கொடுக்கப்படுகிறது. இன்னும் எவ்வளவுபேர் வந்தாலும் அவர்கள் எல்லோருக்கும் இந்த உதவியை அளிக்க மத்திய அரசு அனுமதித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பொற்கொல்லர்களுக்கு கொடுத்த கடனை மத்திய அரசு ரைட் ஆப் செய்திருக்கிறார்கள். அதைப்போல பர்மா, இலங்கை அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடனையும் ரைட் ஆப் செய்ய மத்திய அரசுக்கு மாநில அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : பொற்கொல்லர்களுக்குக் கொடுத்த கடனை மத்திய அரசு ரைட் ஆப் செய்ததுபற்றிய தகவல் எனக்கு இல்லை. அகதிகளுக்குக் கொடுக்கப்படுகிற கடனை ரைட் ஆப் செய்ய வேண்டு மென்று நாம் மத்திய அரசுக்கு எழுதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவர அறிக்கையில் அன் அட்டாச்டு விமன்—தனியாக இருக்கக்கூடிய பெண்களுக்கு பிசினஸ் செய்ய 2 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது என்று இருக்கிறதா ? இப்படி எத்தனைபேர்கள் உதவி பெற்றிருக்கிறார்கள் ? ஐயாயிரம் ரூபாயில் இருந்து 25 ஆயிரம் ரூபாய் வரை பிசினஸ் செய்ய உதவி செய்யப்படும் என்று இருக்கிறதே, இதன்மூலம் எத்தனை பேர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. ஆ. பாந்தாமன் : பர்மா இலங்கையில் இருந்து வருகிறவர்களுக்கு சிறு தொழிற்சாலைகள் அமைக்க சிட்கோ மூலம் கடன் உதவி அளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : சிறு தொழில்கள் அமைக்க 10 ஆயிரத்தில் இருந்து 25 ஆயிரம் வரை ரிபாட்ரியேட் பாங்குகள் மூலம் கடன்பெற வசதிகள் இருக்கின்றன. அதன்மூலம் தான் இப்போது கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : அகதிகளுக்கு அளிக்கப்படுகிற உதவியில் மத்திய அரசாங்கத்தின் பங்கென்ன ? மாநில அரசாங்கத்தின் பங்கென்ன ?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து : முழு உதவித் தொகையும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது.

1973 மார்ச் 17]

திரு. கே. எ. வகாப்: அவர்களுக்கு விடுகள் கட்ட 2,500 ரூபாய் அளிக்கப் படுகிறது. அதைக்கொண்டு அவர்கள் வீடுகள் கட்ட முடியவில்லை, ஆகவே மத்திய அரசு பாதி, மாநில அரசு பாதி என்கிற அளவிலாவது ஏற்றுக்கொண்டு அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கட்ட முடியாதவர்களுக்குத் தள்ளுபடி செய்வதுபற்றித்தான் எழுதியிருக்கிறோம். அந்தப் பணத்தைக் கொண்டு அவர்கள் கட்ட ஆரம்பித்து அதற்குள் முடிக்கவில்லை என்றால் மேற் கொண்டு உதவி செய்வதுபற்றியாவது யோசிக்கலாம். பணத்தை வாங்கிக் கொண்டு வேறுவகையிலேயே செலவிட்டு விடுகிறார்கள். அதனால் பிரச்சினை எழுகிறது.

திருவள்ளுவர் அனாதை விடுதி, வீரவநல்லூர்

* 405. வினா -திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—12—1972 அன்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அனாதை விடுதி பற்றிப் புகார் மனு ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: 1—12—1972 நாளிட்ட புகார் மனு வரப்பெறவில்லை. ஆனால் வீரவநல்லூரில் உள்ள திருவள்ளுவர் அனாதை விடுதி நடைமுறைகளைப்பற்றி 30—11—1972 நாளிட்ட புகார் மனு ஒன்று கல்வி இயக்குநர் அவர்களால் பெறப்பட்டு அதன் நகலை திருநெல்வேலி (தெற்கு) மாவட்டக் கல்வி அலுவலர் அவர்கட்கு அனுப்பப்பட்டு அம்மனுவில் செப்பி யுள்ள புகார்களை ஆராய்ந்து அவருடைய குறிப்புரையை பணிந்தனுப்பும்படிக் கேட்கப்பட்டுள்ளது. அன்னாரின் குறிப்புரை கல்வி இயக்குநரால் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்த அனாதை ஆசிர மத்திற்காக அரசாங்கத்தினிடம் 32 நபர்களுக்கு மானியம் பெற்று, அங்கு 18 பேர்களைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையா?

மாண்புமிகு திருமதி. சத்தியவாணிமுத்து: புகார்கள் வரப்பட்டிருக்கின்றன. அன்ன புகார் என்ற விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற புகார் அதில் அடங்கியுள்ளதா என்பது எனக்குத் தெரி யாது.